**CC**.**No**.54/2025

**Date**: 12.03.2026

**ம.சா.** 1. சோலச்சி, க/பெ. காளிதாஸ், பள்ளத்தூர்.
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

குறுக்கு விசாரணை

**1) இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தான் தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனது தந்தை இறந்த பின்பு இந்த வழக்கில் நான் சேர்க்கப்பட்டுள்ளேன். அவர் உயிரோடு இருக்கும்போது தாக்கல் செய்த வழக்கு. எனது தந்தை 10.01.2026 அன்று காலமானார் அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் எப்போது தாக்கல் செய்தார் என்றால் 06.12.2024 ல் தாக்கல் செய்தார். மேற்படி தேதியில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்காக எனது தந்தை ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். கணினி புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வழக்கு தாக்கல் செய்த நாள் என்று 11.03.2025 என்று உள்ளது என்றால் அவ்வாறுதான் உள்ளது. எனது தந்தைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னுடன் சேர்த்து 3 நபர்கள். என்னுடைய அக்கா சித்ரா தேவி கோட்டையூரில் பஞ்சாயத்து ஆபிசில் தற்காலிக ஊழியராக உள்ளார்.எனது அண்ணன் சேகர் என்பவர் விசாலம் சிட்பண்ட்டில் வேலை செய்கிறார். மேற்படி என் அக்காவையும், எனது அண்ணனையும் இவ்வழக்கில் நான் வாரிசாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.**

**2) அனைவரும் தனித்தனியாகத்தான் வாழ்கிறோம் என்றால் சரிதான். நான் வசிப்பது பள்ளத்தூர். என் அப்பா வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 5 கி.மீ. தூரம் என்றால் சரியல்ல.எனது அப்பா எனக்கு சிறப்பு அதிகார பத்திரம் கொடுத்ததாக Crl.M.P 283/2025 ல் நான் ஒரு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் பாரா 3 ல் எனக்கு புகார்தாரர் வசந்த சேகரன் என்பவர் 12.11.2025 அன்று காரைக்குடி M.S. பத்மநாபன், வழக்கறிஞர் முன்னிலையில் சிறப்பு அதிகார பத்திரம் எழுதிக்கொடுள்ளார் என்றால் சரிதான். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். மேற்படி வசந்த சேகரன்**

**எழுதிக்கொடுத்த அதிகார பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் மனுவில் என் தந்தையின் பெயருக்கு பதிலாக தவறுதலாக எதிரியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் எனது முகவரி கோட்டையூர் என்றும் பள்ளத்தூர் என்று குறிப்பிடபடவில்லை என்றால் நான் அந்த சமயம் கோட்டையூரில்தான் வசித்து வந்தேன்.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 16:08:37 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)